# மீட்பின் அன்னை தமிழ் கத்தோலிக்க மறைத்தளம்

# Our Lady of Deliverance Tamil Catholic Mission

மீட்பின் அன்னை மறைத்தள ஆலயப் பங்குச்சபையின் 2வது கூட்டமானது 15-03-2009 அன்று மாலை 7 மணிக்கு எமது பங்குத் தந்தை அன்று தவராஜசிங்கம் அவர்களின் தலைமையில் அவரின் ஆரம்ப செபத்துடன் ஆரம்பமானது. அன்றைய கூட்டத்தில் பங்குச்சபை உறுப்பினர்கள் 15 பேரும் சமூகம் தந்திருந்தனர். அவர்கள் அனைவரிடமும் விதிமுறைபபடிவம் கொடுக்கப்பட்டு அவர்களுடைய பெயர், விபரங்கள் அனைத்தும் பெறப்பட்டு பங்குத் தந்தையிடம் கையளிக்கப்பட்டது.
முதலாவது பங்குச்சபைக் கூட்டத்தின் அறிக்கையினை பங்குச் சபையின் செயலாளர் திரு. நெல்சன் ஆரோக்கியநாதன் அவர்கள் வாசித்தார். பின் திரு யூலியன் அவர்கள் அறிக்கையினை முன்மொழிய, திரு. அல்பிரட் அவர்கள் வழிமொழிந்தார்.

அடுத்து snow அகற்றும் பணிக்கு இயந்திரம் தேவைப்படுவதால் அதனை வாங்கலாம் என்றும் நிர்வாக சபைக் உறுப்பினர் கூட்டத்திலும் கூறியிருப்பதாக பங்குத்தந்தை கூறினார். மேலும், இது தவக்காலமாக இருப்பதனால் எமது பங்கில் பங்குனி மாதம் 27, 28, 29 ஆகிய திகதிகளில் 'ஞான ஒடுக்கம்' வைப்பதாகத் தீர்மானிக்கப்பட்டது. இந்த 'ஞான ஓடுக்கம்' அருட்தந்தை 'றேமன்' அவர்களால் நடாத்தப்படும் என்றும், 'ஞான ஓடுக்கமானது' எம் பங்கிலுள்ள சிறியவர்கள் முதல் பெரியவர்கள் அனைவருக்கும் பயனுள்ளதாகவும் விசேசமாக எம்மறைத்தளத்தில் உள்ள திருமணமானவர்களுக்கும், திருமணம் என்னும் திருவருட்சாதனத்தைப்பெற இருப்பவர்களுக்கும், குடும்பங்களிலே பல பிரச்சனைகளினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், இளைஞர்களின் ஆன்மீக வாழ்விற்கும் பயனளிக்கக்கூடியதாக அமையும் என்றும் பங்குத் தந்தை கூறினார்.

மேலும், இந்தியாவிலிருந்து அருட்தந்தை அருள்தாஸ், கல்வி சம்பந்தமாக மொன்றியல் வரவிருப்பதாகவும், அவருக்குத் தங்குமிட வசதி செய்யும்படியும் இந்திய மேற்றாணியார் தன்னுடன் தொடர்புகொண்டு கதைத்ததாகவும் கூறினார். அவருடைய விசா அனுமதி கிடைத்து அவர் மொன்றியல் வந்ததும், அவரையும் பயன்படுத்தி எமது பங்குமக்களின் ஞானகாரியங்களைப் பூர்த்தி செய்து கொள்ள ஒரு வாய்ப்பாக அமையும் என்றும் தந்தை அவர்கள் கூறினார். மேலும், வெள்ளிக்கிழமை 27ம் திகதி பொது வழிநடத்தல் என்றும், சனிக்கிழமை 28ம் திகதி, மாலை 4 மணி தொடக்கம் 6 மணி வரை இளைஞர்களுக்கும், மாலை 7மணி தொடக்கம் 9 மணி வரை குடும்பங்களுக்கும், அதேவேளை ஞான ஒடுக்கத்தில் கலந்துகொள்ளும் பெற்றோர்களின் பிள்ளைகளுக்கான இடைவேளை உணவு வசதிகளை திரு. அல்பிரட் ஞானராஜா அவர்களும், பெற்றோர்களுக்கான இடைவேளை உணவு வசதிகளை திருமதி கலிஸ்ரா தவராஜா அவர்களும் பொறுப்பேற்றுக் கொண்டனர். ஞாயிற்றுக்கிழமை 29ம் திகதி பாவசங்கீர்த்தன நாளாகவும் இருக்கும் என்றும் கூறப்பட்டது.

**ஆலய பங்குச்சபையின் மாதாந்த கூட்ட அறிக்கை 15-03-2009**

மேலும், ஒவ்வொரு வருடமும் எம்முடைய பங்கினால் திருத்தல யாத்திரை சென்று வழிபாடுகள் செய்து வந்தோம். ஆனால் கடந்த வருடம் எங்களுடைய பங்கினால் திருத்தல யாத்திரை செய்யமுடியாமற் போய்விட்டது. அதனை இந்த ஆண்டு செய்யலாம் எனக் கலந்துரையாடப்பட்டது. கோடைகாலங்களில் மூன்று நிகழ்வுகள் எங்களுடைய மறைத்தள மக்களால் நடாத்தப்படுவது உண்டு.

1.மீட்பின் அன்னை மறைத்தளப் பெருவிழா
2.திரு யாத்திரை
3.மருதமடு மாதாவின் பெருவிழா, ஆகியனவாகும்.

இந்த வருடம் மருதமடுமாதாவின் பெருவிழாவினை எங்களுடைய ஆலயத்தில் பெரிய அளவில் கொண்டாடலாம் எனத் தீர்மானிக்கப்பட்டு அதற்கான சகல வசதிகள், தேவைகள் என்பன பற்றியும் கலந்துரையாடப்பட்டது. அடுத்து திருயாத்திரை செல்வதுபற்றி தீர்மானிக்கப்பட்டு, திருயாத்திரை செல்லுமிடம் தீர்மானிக்கப் படாமையினால் அந்தப் பொறுப்பை திரு. யூலியன் ஜெயரெட்ணம் அவர்களிடமும், இடம் தீர்மானிக்கப்பட்டதன்பின் அதற்க்கான போக்குவரத்து வசதிகளை செல்வன் சார்ள்ஸ் அமிர்தநாதர் பொறுப்பேற்றுக் கொள்வதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

அடுத்து, றீகோ திருத்தலம் செல்வது பற்றிக் கலந்துரையாடுகையில், றீகோ திருத்தல ஆலய நிர்வாகம், தமிழ் மக்கள் 500பேருக்குக் குறைவாக மட்டுப்படுத்தப்பட்ட தொகையினர் மட்டும் கலந்து கொள்ளக்கூடியதாக வழிபாட்டை ஒழுங்கு செய்யும்படி கண்டிப்பாககக் கூறிவிட்டமையால், இவ்விடயத்தை தொடர்ந்து வரும் நிர்வாகசபைக் கூட்டங்களில் தீர்மானிக்கலாம் எனக் கூறப்பட்டது. அடுத்து, எமது மறைத்தளத்தில் உள்ள வயோதிபர்களுக் கென்று ஆலயத்தில் ஒரு நேரம் ஒதுக்கப்பட்டு அவர்களும் எங்களுடைய ஆலய தேவைகளில் பங்கெடுத்துக்கொள்ள சந்தர்ப்பம் கொடுக்கப்படவேண்டும் என்றும் கலந்துரையாடப்பட்டது. வயோதிபர்களை வழிநடத்தும் பொறுப்பு திரு. மோசஸ் சூசைமாணிக்கம் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அதனை ஆரம்பிக்கும் திகதி தீர்மானிக்கப்படாததினால் இது சம்பந்தமான விடயங்களுக்கு திரு. மோசஸ் சூசைமாணிக்கத்துடன், திரு. யூலியன் ஜெயரெட்ணம் அவர்களும் இணைந்து உதவுவதாகக் கூறினார்.

அடுத்து எமது ஆலயத்தில் திருப்பலியில் கலந்துகொள்ளும் அனைவரின் நன்மை கருதி, இவர்களுக்கான உணவு வசதியினை மாதத்தில் ஒரு ஞாயிற்றுக் கிழமையாவது செய்து கொடுக்கலாம் என்றும், உணவு தேவையானவர்கள் அதற்கு முதற்கிழமை எமது பங்கில் சமுகநலப் பொறுப்பில் இருக்கும் திருமதி. கலிஸ்ரா தவராஜா அவர்களிடம் பெயர்களைப் பதிவுசெய்து அடுத்த ஞாயிற்றுக்கிழமை தங்கள் உணவிற்கான பணத்தினை செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் கூறப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு பங்குச்சபை உறுப்பினர்களும் மாதத்தில் ஒரு ஞாயிற்றுக்கிழமை தொடர்ந்து செய்வதாகவும் கூறப்பட்டது.
இதில் சேகரிக்கப்படும் பணமானது எங்கள் நாட்டு மக்களின் தேவைகளைப்

பூர்த்திசெய்ய அனுப்பிவைக்கப்படும் என்றும் பங்குத் தந்தை கூறினார். மேலும், பிற விடயங்கள் பற்றிக் கலந்துரையாடப் பட்டதில் பங்குமக்களுடன் சேர்ந்த ஒரு கூட்டம் வைக்கவேண்டும் என்றும், அக்கூட்டத்தினால் பங்குமக்கள் அனைவரும் எங்கள் ஆலயத்தில் நடைபெறும் சகலவிடயங்கள், ஆலய தேவைகள் என்பன பற்றியும் அறிந்துகொள்ளக் கூடியதாக அமையும் என்றும் பங்குத்தந்தை கூறினார். மேலும், இனிவரும் பங்குச்சபைக் கூட்டங்களில் ஒவ்வொரு பங்குச்சபை உறுப்பினரிடமும் அவரவருடைய பணிகள் பற்றிக் கலந்துரையாடப்பட வேண்டும் என்றும், இதனால், பங்குச்சபை உறுப்பினர்கள் அனைவரும் எமது பங்கில் நடைபெறும் அனைத்து விடயங்களையும் அறிந்துகொள்ள ஒரு வாய்ப்பாக அமையும் என்றும் திரு. அம்புறோஸ் தாவீது அவர்கள் கூறினார்.

மேலும், பிள்ளைகளின் எதிர்காலத்திற்காகவும், அவர்களின் ஆன்மீகத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், செபங்கள், வாசகங்கள் என்பன அவர்களுக்கு நன்கு தெரிந்த மொழிகளான ஆங்கிலம், பிரஞ்சு மொழிகளில் பூசைவழிபாடுகள் வைக்கலாமா? என்றும் கலந்துரையாடப்பட்டது. இதில் பலரும் பல கருத்துக்களைக் கூறுகையில் எங்கள் பிள்ளைகள் தமிழில் பூசை பார்க்க வேண்டும், தமிழ் கற்பிக்க வேண்டும், தமிழ்ச் செபங்கள் வாசகங்கள் என்பவற்றை அவர்கள் கற்க வேண்டும். எங்களுடைய தமிழ்க் கலாச்சாரத்தை அவர்கள் பின்பற்ற வேண்டும் என்பதற்க்காக தூர இடங்களில் இருந்து பெற்றோர்கள் பிள்ளைகளை அழைத்து வருவதாகவும், அவர்களுக்கு ஆங்கிலம், பிரஞ்சு மொழிகளில் வழிபாடுகளை நடாத்தினால் அவர்கள் எதிர்காலத்தில் எங்களுடைய தமிழ் மறைத்தளத்தை விட்டு இலகுவாகச் சென்று விடுவார்கள் என்றும், அவர்களுக்குச் செபங்கள் வாசகங்கள் விளங்கவில்லை என்றால் மறைக்கல்வியில் ஆசிரியர்களும், வீட்டில் பெற்றோரும் கவனம் செலுத்தவேண்டும் என்றும் கலந்துரையாடப்பட்டது.

அடுத்து மரியாயின்சேனை அங்கத்தவர்கள் மிகவும் குறைவாயிருப்பதால், அதனை ஊக்குவிப்பதோடு, உதவி செய்யும்படியும், அதற்கு எமது பங்கில் உள்ள வயோதிபர்களை மரியாயின் சேனையில் சேர்த்துக் கொள்வதற்க்கு அவர்களுக்குத் தேவையான போக்குவரத்து வசதிகளைச் செய்து ஒத்துழைப்பு வழங்கும்படியும், அத்துடன் தானே தனித்து நின்று பல விடயங்களையும் செய்து வருவதாகவும் திரு. அல்பிரட் ஞானராஜா அவர்கள் கூறினார். உப செயலாளர் திரு. அமிர்தநாதர் பாக்கியநாதர் அவர்களின் இறுதிச் செபத்துடன் எமது 'மீட்பின் அன்னை மறைத்தளப் பங்குச் சபையின் கூட்டம் இனிதே நிறைவுபெற்றது.

அருட்.தந்தை அன்றூா தவராஜசிங்கம்
பங்குத்தந்தை
மீட்பின் அன்னை மறைத்தளம்

திரு.நெல்சன் ஆரோக்கியநாதன்
செயலாளர் (பங்குச்சபை)
மீட்பின் அன்னை மறைத்தளம்